அ.வ.எண் : 14/2015 நாள் : 06.08.2024

பி.வா.சா.1 – இளங்கோவன்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

1. தாவா சொத்தில் நான் கட்டுமான பொருட்கள் இறக்கி வைத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் கொட்டகை எந்த அளவில் போட்டுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. என்னவகையான கொட்டகை போட்டுள்ளேன் என்றால் கூரை கொட்டகை. கூரை கொட்டகைக்கு தேவையான பொருட்கள் வாங்கியதற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா இல்லை. வாதி எரித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் வாதி கொட்டகை எரித்ததாக கேள்விபட்டேன். அது பற்றி நான் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை.

2. வாதிகள் கூரை கொட்டகையை எரிக்கவில்லை என்றும் எனது தரப்பில் உள்ள ஆட்கள் தான் கூரை கொட்டகையை எரித்து விட்டார்கள் என்றும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றும், அதன்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்தை என் பெயரில் வாங்கி கொடுத்த மகாலிங்கம் என்பவர் மூலம் கொட்டகை எரிக்கப்பட்டதற்கான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் மகாலிங்கம் என்ற மனோகர் பெயரில் தான் புகார் கொடுக்கப்பட்டது.

3. பி.வா.சா.ஆ.1–ல் சர்வே எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சர்வே எண் இல்லை. பட்டாதாரர் பெயரும், பட்டா எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.10 ஆனது இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்ட பின்பு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 கிரைய ஆவணமானது ஆனந்தாயி வாரிசுகளிடமிருந்து நாச்சியப்பன் கிரையம் பெற்றுள்ளார் என்றும், அதில் குறிப்பிட்டுள்ள நான்குமாலுக்கு உட்பட்ட சொத்துக்களை தான் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.8 ல் தெற்கு நான்குமாலாக வே.சாமியய்யா புஞ்சைக்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.5–ல் தெற்கில் பெரி. காளிமுத்தன் பெரி. கௌதமன் புஞ்சைகள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் வாங்கும்போது நான் வாங்கிய இடத்திற்கு தெற்கே கௌதமன் மற்றும் காளிமுத்தன் புஞ்சை இருந்தது. அதற்கு முன்பு பழைய பத்திரங்களில் வேறு நபர்களின் பெயர்கள் இருந்திருக்கலாம்.

5. நாச்சியப்பன் வாங்கிய சொத்தும், தாவா சொத்தும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் SLR ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பார்த்தால் தான் தெரியும். வா.சா.ஆ.2– ஆன SLR ஆவணத்தில் தாவா சொத்து வே.சாமியய்யா பெயரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.47/2 ஆனது எனது முன் பாத்தியஸ்தரான ரகுநாதன் மனைவி ஆனந்தாயி பெயரில் இருந்தது என்றால் அது பற்றி தெரியாது, ஆனந்தாயி பெயரில் 47/6 தான் இருந்தது.

6. வருவாய்த்துறை ஆவணங்களில் தவறுதலாக ஆனந்தாயி பெயரில் பட்டா ஏற்பட்டது என்றும் அதை வைத்து தான் தாவா சொத்து எனக்கு பாத்தியமானது என்றும் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சட்ட காலத்திற்கு மேலாக வாதிகள் தான் அனுபவத்தில்

உள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விவரம் முன் பாத்தியஸ்தர்களின் பற்றிய விவரம் அனைத்தும் மூன்றாம் பிரதிவாதி நாச்சியப்பனுக்கு தான் தெரியும் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தானாக முன்வந்து எனக்கும் தெரியும் என சாட்சியம் அளிக்கிறார். நாச்சியப்பன் என்பவர் இந்த ஊரில் தான் உள்ளாரா என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.6–ஆன செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் சர்வே எண்.47/2 ஆனது ரகுநாதன் மனைவி ஆனந்தாயி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல அதில் சுழித்துள்ளார்கள் காளிமுத்தன் பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள சொத்து ஆனந்தாயி சொத்து என்றும், அதைத்தான் என் முன் பாத்தியஸ்தரான நாச்சியப்பன் கிரையம் வாங்கினார் என்றும் வருவாய்த்துறை ஆவணங்களில் தவறாக ஆனந்தாயி பெயரில் ஏற்பட்டிருப்பதை வைத்து நான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல, வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

//ஒம்//

மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
தேவகோட்டை.